2018 ஜூன் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வதை நான் உறுதியாக ஏற்றுக்கொள்கிறேன். நான் அதையெல்லாம் செய்வதற்குத் தயாராகத்தான் இருக்கிறேன். இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், முடிந்தவரை, பதில் வந்தால் அதை* Agenda-*வில் சேர்த்து, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற வழி செய்ய வேண்டும் என்று நினைக்கின்றவன் நான். ஆனால், சில நேரங்களில், துறைகளிடமிருந்து பதில் வருவதற்கு முன்னரே, அவையின் கவனத்தை ஈர்க்க அவர்களுக்குப் பேச வாய்ப்பளிக்கிறேன். முடிந்தவரை இதை* Agenda-*விலே கொண்டுவருவதற்கும், துறையின் மாண்புமிகு அமைச்சர்களுக்கும், அரசுச் செயலாளர்களுக்கும் நான் உரிய அறிவுரைகளை வழங்குகிறேன். நிச்சயமாக அது நடக்கும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு, என்னவென்று சொல்லுங்கள். நீங்கள் பேரவை விதி 55-ன்கீழ்தான் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். இன்று காலையில் நீங்கள் என்னை மிகவும் வற்புறுத்தினீர்கள். நீங்கள் பேசிய பின்னர், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைப் பதில் சொல்லச் சொல்கிறேன்.

(இ) சென்னை, கந்தப்பச்செட்டித் தெருவில் மின் பழுது நீக்கும்போது உயிரிழந்த மின் வாரிய ஊழியர் திரு. பழனி என்பவருக்கு நிவாரணத்தை உயர்த்தி வழங்கக் கோருதல்

***திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்தப்பச்செட்டித் தெருவில் ஏற்பட்ட மின் பழுதை நீக்குகின்றபோது, மின்* Lineman *திரு. பழனி அவர்கள் மின்சாரம் தாக்கி உயிரிழந்திருக்கிறார். அந்த இடத்தில்* Earth rod *அமைக்கப்படாத நிலையில், அந்தப் பழுதைப் பார்த்ததால், மரணம் ஏற்பட்டிருக்கிறது.* Earth rod *என்பது எமனையும் வெல்லக்கூடியது. வெளிச்சத்தைத் தரவேண்டிய முயற்சியில் ஈடுபட்ட அந்த மின் ஊழியரின் குடும்பம் இன்று இருளில் தள்ளப்பட்டிருக்கிறது. அவருக்கு பொம்மி என்ற மனைவியும், சாலினி, திவ்யா என்ற இரண்டு மகள்களும் இருக்கின்றார்கள். ஒரு பெண், கல்லூரியில் இரண்டாம் ஆண்டு கணிதவியல் படித்துக்கொண்டிருக்கிறார். இன்னொரு பெண், +1 படித்துக்கொண்டிருக்கிறார். இப்படி மின் ஊழியர்கள் இறக்கும்போது ஈமச்சடங்கிற்கு ரூ.5,000/-தான் தருகிறார்கள்.*

அது போதவில்லை. நேற்றைக்கு நானும், எங்கள் சட்டமன்ற உறுப்பினர் திரு. இரவிச்சந்திரன் அவர்களும் அந்த ஊழியரின் ஈமச்சடங்கிற்கு உதவி செய்தோம். எங்கள் செயல் தலைவரிடம் எடுத்துக் கூறியவுடன், படிப்புச் செலவையும் செயல் தலைவர் எடுத்துக்கொள்வதாக உறுதியளித்திருக்கின்றார். ஆகவே. . .

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சேகர்பாபு, நீங்கள் தனிப்பட்ட முறையில் என்ன செய்தீர்கள் என்பதை இந்த அவையில் சொல்லத் தேவையில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், அந்தக் குடும்பத்திற்காக, அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லுங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர் இறக்கின்றபோது, இறுதிச் சடங்கிற்கு ரூ.5,000/- கொடுப்பது போதவில்லை என்பதைக் கூற வருகிறேன். அதோடு, இவர் இருளை நீக்குகின்ற தொழிலைச் செய்யும் தொழிலாளி என்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 3 இலட்சம் இதுபோன்று இறப்பவர்களுக்கு தருவார்கள். அந்த நிதியை உயர்த்தி, குறைந்தது ரூபாய் 10 இலட்சமாவது அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தப் பகுதி அண்ணா நகர் செண்டர் பகுதி. அன்றையதினம், கந்தப்பச் செட்டித் தெருவில் இருக்கின்ற 58, 59, 60 ஆம் இலக்கம் கொண்ட வீடுகளில் மின் விநியோகத்தில் பழுது ஏற்பட்டிருக்கிறது என்று தகவல் வந்தவுடன், அந்த மின் பணியாளர் அதை சரி

2018 ஜூன் 8] [திரு. பி. தங்கமணி]

செய்வதற்காக அங்கு சென்றார். அவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. Earth rod-*ம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்தப் பணியாளர் இது* pillar box-*தானே, நாம் கீழேயே செய்துவிடலாம் என்று நினைத்து, அஜாக்கிரதையாக அந்தப் பணியைச் செய்துகொண்டிருந்தார்.* Backfeed *என்று சொல்லக்கூடிய* cable fault *ஆகிவிட்டது என்று சொன்னால் அதற்கு* alternate supply *ஒன்று இருக்கும். ஏற்கெனவே அங்கு பணி செய்தவர்கள் ஏதோ* damage *செய்துவிட்டார்கள். அது அவருக்குத் தெரியவில்லை. அது தெரியாமல் கால் பட்ட காரணத்தினால் அந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது. விபத்து ஏற்பட்டது வருந்தத்தக்கதுதான். இல்லையென்று சொல்லவில்லை. இருந்தாலும் மின்சார வாரியத்தின் சார்பாக, பல்வேறு உபகரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பணியாளருடைய உயிர்ப் பாதுகாப்புதான் மிக முக்கியம் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கருத்திலே கொண்டு, அதுபோன்ற உபகரணங்களை வழங்கி வருகின்றது. இருந்தாலும், எதிர்பாராதவிதமாக அதுபோன்ற விபத்து ஏற்பட்டுவிட்டது. விபத்தில் அவர் உயிரிழந்துவிட்டார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, ஈமக்கிரியைக்காக அரசு ரூபாய் 5 ஆயிரம்தான் நிதி தருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, பிற்காலத்திலே இதுபோன்று நிகழ்வுகள் ஏற்பட்டால், அதற்கு அதிக நிதி கொடுப்பதற்கு பரிசீலிக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதேபோல அந்தக் குடும்பத்திலே இருப்பவர்களுக்கு அந்த ஊழியரின் முழுப் பணிக்காலம் எவ்வளவோ அதற்கான அத்துணை பயனும் கிடைக்கும். அதுபோல குடும்பத்தில் இருக்கின்ற ஒருவருக்கு உடனடியாக மின்சார வாரியத்தில் வேலை போட்டுத் தரப்படும். மின்சார வாரியம் மட்டும்தான்* compassionate ground-*ல் உடனடியாகப் பணி வழங்கிக்கொண்டிருக்கிறது. ஏனென்று சொன்னால், உடனடியாக ஏதாவது ஒரு வாய்ப்பைக் கொடுப்பதற்கு, மின்சார வாரியத்தில் கிட்டத்தட்ட 80, 85 ஆயிரம் பணியாளர்கள் இருக்கின்ற காரணத்தினால் ஏதாவது ஒரு பணி உடனடியாக வழங்கப்படும். குடும்பத்தில் இருப்பவர்களில் தகுதியானவர்களுக்கு, தகுதிக்கேற்ப, படிப்புக்கேற்ப ஒரு வேலை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*